Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 28, 2022

செவ்வாய்க்கிழமை ஜூன் 28, 2022 | ஒளி: 08 கதிர்: 034 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## மின் கட்டணம் 57% அதிகரிப்பு?



மின்கட்டணம் அதிகரிப்பானது 57 சதவீதத்தை தாண்டக்கூடாது எனவும், உத்தேச மின்கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளை அறிய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இக்கட்டான சூழ்நிலையில்

# ஐ.எம்.எப் பேச்சுவார்த்தைகள் மிக அவசியம்

### தொடர்ந்தும் ஒத்துழைப்புகளை வழங்குவோம் என அமெரிக்க தூதுக்குழு தெரிவிப்பு





இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும், இலங்கையின் நிதி முகாமைத்துவத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா இணங்குவதாகவும் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க தூதுக்குழு, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடத்தில் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

தற்போதைய சூழ்நிலையின்

## பாரதூர விளைவுகளை புரிந்து கொள்ளுங்கள்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை

இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய தற்போதைய சூழ்நிலையின் தீவிரம் மற்றும் பாரதூரமான விளைவுகளைப் புரிந்து கொள்ளுமாறு ஜனாதிபதி, அரசாங்கம் மற்றும் ஏனைய அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் பிரமுகர்களுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

GMOA ESTABLISHED IN 1926

## மருந்துகள் இல்லை; கவனமாக இருங்கள்

### அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக, மக்கள் இந்த நேரத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2



இலங்கைக்கான அவசர தேவைகள் குறித்து

## மிலிந்த மொரகொட- அமைச்சர் ஹர்தீப் சிங் பேச்சு

இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிற்கும், இந்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் வீடமைப்பு, நகர்ப்புற விவசாயத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கும் இடையில் நேற்று (27) சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. புது டெல்லியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் நெருக்கடி நிலைமைகள் மற்றும் இலங்கைக்கு இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்புகளின் அவசியம் குறித்து மிலிந்த மொரகொட கலந்துரையாடியுள்ளார். இதன்போது இந்தியாவின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுப்பது குறித்தும் அமைச்சர் ஹர்தீப் சிங் வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

## “பொய் வாக்குறுதி வழங்கும் படுமுட்டாள் நான் அல்ல”

### –பிரதமர் ரணில் திட்டவட்டம்



கடந்த தேர்தல் காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளால் தான் நாடு இன்று மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. நானும் அவர்கள் போல் பொய் வாக்குறுதிகளை வழங்கி ‘படுமுட்டாள்’ என்ற பெயரைக் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

தொடர்ச்சி P2

எரிபொருளை பெற்றுக்கொள்ள

## காஞ்சன – நசீர் கட்டார் பயணம்; ரஷ்யா சென்றார் சுசில்

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காகவும் மற்றும் தொழிலாளர்கள் குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் ஆகியோர், நேற்று (27) பிற்பகல் கட்டாருக்கு புறப்பட்டனர்.

தொடர்ச்சி P2



அதிக வீரியம் கொண்ட

## BA5 கொவிட் வைரஸ் பரவுகிறது

அதிக வீரியம் கொண்டதும், வேகமாக பரவக்கூடியதுமான BA5 புதிய கொவிட் வைரஸ் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், 63 நாடுகளில் இந்த வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய்யெதிர்ப்பு, ஒவ்வாமை மற்றும் மூலக்கூறுகள் பிரிவின் பிரதானி வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

எரிபொருள் நெருக்கடியின்

## காரணகர்த்தாக்கள் சுதந்திரமாக உள்ளனர்

### அரசாங்கத்தின் முயற்சிகளால் கடுமையான சேதம் வரும் என்கிறார் சம்பிக்க



எரிபொருள் நெருக்கடிக்கு காரணமான முக்கிய பிரமுகர்கள் அரசாங்கத்தின் உயர் பதவிகளில் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர் என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, எரிபொருள் நெருக்கடிக்கு காரணமானவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்று குற்றம்

தொடர்ச்சி P2

தனுஷ்கோடிக்கு தப்பிச்சென்ற

## இலங்கை தம்பதி மயங்கிய நிலையில் மீட்பு

கனகராசா சரவணன்



இலங்கையில் இருந்து இந்தியாவின் தனுஸ்கோடி கோதண்டராமர் கடற்கரைப் பகுதியில் உணவு, தண்ணீர் கிடைக்காமல் மயக்க நிலையில் இருந்த கணவன், மனைவியை நேற்று (27) மீட்டுள்ளதாக தமிழக கரையோர பாதுகாப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## இந்தியா எம்மை ஆக்கிரமிக்க நினைக்கின்றது

### இந்தியாவின் 29 ஆவது பிராந்தியமாக இலங்கையை மாற்ற இடமளிக்க முடியாது

பா. நிரோஸ்



இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, இலங்கையை தமது 29 ஆவது பிராந்தியமாக மாற்றிக்கொள்ள இந்தியா எடுக்கும் சதித்திட்டங்களை தோற்கடிக்க வேண்டும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (27) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சி P2

## யூரியா வரவும் தாமதமாகும்

யூரியா உரத்தை ஏற்றிக்கொண்டு ஜூலை 6 ஆம் திகதி இலங்கைக்கு வரவிருந்த கப்பல், நாட்டை வந்தடைய தாமதமாகும் என கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் அறிவித்துள்ளது.

6 ஆம் திகதி வந்தடைய இருந்த கப்பல் தாமதித்தமையால் மற்றுமொரு கப்பல் உரத்தை ஏற்றிக்கொண்டு நாட்டை வந்தடையவுள்ளது என்று நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஓமானில் இருந்து இலங்கைக்கு வரவுள்ள இந்த கப்பல் 40,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை கொண்டுவரவுள்ளது.

இந்திய கடன் வசதியின் கீழ் பெறப்பட்ட உரத்தொகுதியே இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவித்த கொமர்ஷல் உர நிறுவனம்,

தொடர்ச்சி P2

## எரிபொருள் வரிசையை மோதித் தள்ளிய பஸ்

### ஐவர் காயம்; 5 மோட்டார் சைக்கிள்களும் சேதம்

கனகராசா சரவணன், ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் ஊறணி பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக எரிபொருளுக்காக வீதியோரத்தில் வரிசையாக காத்திருந்தவர்கள் மீது தனியார் பஸ் மோதியதில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று (27) காலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஐந்து மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றுகின்றவர்களை செங்கலடி பிரதேசத்தில் இருந்து ஏற்றிக் கொண்டு ஆரையம்பதியை நோக்கி பயணித்த தனியார் பஸ் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஐ.எம்.எப் பேச்சுவார்த்தைகள் மிக அவசியம்

நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க திறைசேரியின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதி உதவிச்செயலாளர் ரொபேர்ட் கப்ரொத் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப்பிராந்தியத்துக்கான பிரதி உதவிச்செயலாளர் கெலி கெய்டெலிங், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோர் நேற்று (27) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடியிருந்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் தமது ஒத்துழைப்புகள் குறித்தும், இலங்கையின் செயற்பாடுகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையில் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் குறித்து அறிந்துகொண்டுள்ள அமெரிக்க தூதுக்குழு, இந்த பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜதந்திர குழுவும் தெரிவித்துள்ளது. தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடியானதும் சவால் நிறைந்த காலகட்டத்தை சமாளிக்கவும், இந்த நெருக்கடிகளில் இருந்து விடுபடவும் தம்மாலான குறுகிய மற்றும் நீண்டகால ஒத்துழைப்புக்களை தாம் வழங்குவதாக தெரிவித்துள்ள அமெரிக்க தூதுக்குழு, சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகள் இக்கட்டான சூழ்நிலையில் மிக அவசியமானது எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதானது, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. அத்துடன், இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராயவும், இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் சமூகங்களுக்கு நேரடியாக மில்லியன் கணக்கான டொலர்களை மனிதாபிமான உதவியாக வழங்குவதற்கான அமெரிக்க முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், இலங்கை சவாலான காலகட்டத்தில் நகர்ந்துகொண்டுள்ளது. எனினும் இலங்கைக்கு வளமான, பாதுகாப்பான மற்றும் ஜனநாயக எதிர்காலத்தை அடைய உதவும் வகையில் நாங்கள் தொடர்ந்து உதவிகளையும், நீண்ட கால ஒத்துழைப்புக்களை வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளார் .



# மின் கட்டணம் 57% அதிகரிப்பு?

இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள், இன்று முதல் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (www.pucsl.gov.lk) உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் எனவும் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில், பொதுமக்களிடமிருந்து முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அதற்கமைய, இன்று (28) முதல் 3 வாரங்களுக்கு, மின் கட்டண அதிகரிப்பு தொடர்பான முன்மொழிவுகள், பொதுமக்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## பாரதூர விளைவுகளை...

இலங்கை அரசாங்கத்தின் மீதான தேசிய மற்றும் சர்வதேச நம்பிக்கையை மீட்டெடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் நேற்று (27) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள பற்றாக்குறையின் விதம் குறித்து மிகவும் கவலையடைவதாக தெரிவித்த சங்கம், நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைவதற்கு வழிவகுத்துள்ளதாக தெரிவித்துள்ளது. குறிப்பாக எரிபொருளானது இலங்கை அரசாங்கத்தால் பாதகமான முறையில் கையாளப்படுகிறது என்றும் மக்களின் வாழ்க்கை, நாட்டின் நிர்வாகம் மற்றும் வர்த்தகங்களை நடத்துதல் மற்றும் இறுதியில் சமூகத்தின் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை பாதிக்கிறது என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையானது, உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் உட்பட பொருளாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் அச்சுறுத்துகிறது. இது, நீதி நிர்வாகத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் சங்கம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறுகிய காலத்தில் தொடர்ந்து எரிபொருளை வழங்குவதை உறுதிசெய்வது தொடர்பான அதன் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு சரியான நேரத்தில் மற்றும் போதுமான தகவல்களை உடனடியாக வழங்குமாறு அரசாங்கத்துக்கு சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

எரிபொருள் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான அதன் திட்டங்கள் குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்துவதுடன், மக்களுக்கு நியாயமான மற்றும் சமமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்கான பயனுள்ள திட்டத்தை உடனடியாக வகுக்க வேண்டும் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் நன்மை கருதி, மக்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு ஜனாதிபதியும், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியினரும் பொறுப்பேற்க வேண்டியது அவசியமானது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.



## மிலிந்த மொரகொட- அமைச்சர் ஹர்தீப்...

எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக இந்தியா வழங்கியுள்ள கடன் உதவிக்கு நன்றி தெரிவித்த உயர்ஸ்தானிகர், தற்போது இலங்கைக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசல் விநியோகங்களை அவசரகால அடிப்படையில் பாதுகாப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கலந்துரையாடினார். அத்துடன், உடனடி நெருக்கடியை சமாளிக்க உதவுவதற்கும் இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பெட்ரோலிய துறையில் இந்தியாவும் இலங்கையும் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# BA5 கொவிட் வைரஸ் பரவுகிறது

இலங்கையால் BA5 கொவிட் வைரஸ் திரிபு தொற்றிய நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என தெரிவித்துள்ள அவர், பொதுமக்கள் கூடிய கவனத்துடன் சுகாதார வழிமுறைகளை பின்பற்றியாக வேண்டும் எனவும் கூறியுள்ளார். ஏற்கெனவே நாட்டில் பல்வேறு கொவிட் வைரஸ் திரிபுகள் காணப்படுகின்ற போதிலும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள வைரஸானது ஏனைய வைரஸ்களை விடவும், மிகவும் வேகமாக பரவக்கூடியது என இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# காரணகர்த்தாக்கள் சுதந்திரமாக உள்ளனர்

கொழும்பில் நேற்று (27) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனங்களை பதிவு செய்துள்ளதாகவும் எனினும், கோரப்படாத முன்மொழிவுகள் மூலம் எரிபொருளைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆறு எரிபொருள் ஏற்றுமதிகளை இறக்குமதி செய்வதாக உறுதியளித்த போதிலும், அண்மையில் இலங்கைக்கு ஒரு கப்பலேனும் வரவில்லை என்றார்.

2012ஆம் ஆண்டு தரமற்ற எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்ட போது எரிபொருளின் தரம் காரணமாக வாகனங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்ட அவர்,

கால விலைமனுக்கோரரர்கள் மற்றும் உடனடி விலைமனுக்கோரரர்கள் நடைமுறையில் இருப்பதாகவும் கோரப்படாத முன்மொழிவுகள் எரிபொருள் விநியோகத்தை பாதிப்பதுடன், கடுமையான சேதத்தை ஏற்படுத்தும் என்றார்.

## மருந்துகள் இல்லை: கவனமாக இருங்கள்

எனவே, மக்கள் இந்த நேரத்தில் இயலுமான வரை பாதுகாப்பாக இருப்பது முக்கியம் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடக குழு உறுப்பினர் டொக்டர் பிரசன்ன கொலம்பகே தெரிவித்தார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க காரியாலயத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டில் போதியளவு மருந்து கையிருப்பு இல்லை என்று தெரிவித்த அவர், இருக்கும் மருந்துகளின் கையிருப்பு வேகமாக குறைந்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

அலுவலக கடமைகள், வீட்டு வேலைகள் போன்றவற்றின் போது விபத்து ஏற்பட்டால், நோயாளிகளுக்கு போக்குவரத்து வசிதிகளை வழங்குவதும், அதுபோல வைத்தியர்கள், வைத்தியாசாலை ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளதாக தெரிவித்தார்.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மருந்துகள் குறித்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்த அவர், இந்த நேரத்தில் குழந்தைகளை நன்றாக கவனித்துக்கொள்வது மிகவும் அவசியம் என்றார்.

## யூரியா வரவும்...

மூன்று தனித்தனி பிரிவினரால் உரத்தொகுதி பரிசோதிக்கப்படும் என்று தெரிவித்தது.

உர தொகுதி கிடைத்தவுடன் இலங்கை தர நிர்ணய நிறுவனம் உட்பட அடையாளம் காணப்பட்ட சில நிறுவனங்களின் உர மாதிரிகளை பரிசோதனை செய்து ஒரு வாரத்துக்குள் அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்று தேசிய உர செயலகம் அறிவித்துள்ளது.



## படுமுட்டாள் நான் அல்ல

கடந்த தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளை நம்பித்தான் அவர்களின் கட்சிக்குப் பெரும்பாலான மக்கள் வாக்களித்து அவர்களை ஆட்சிப்பீடம் ஏற்றினார்கள். ஆனால், இறுதியில் நடந்தது என்ன? எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. ஆணையை வழங்கிய மக்களே ராஜபக்ஷ குடும்ப ஆட்சி வேண்டாம் என்று போராட்டத்தை ஆரம்பித்தார்கள். நானும் ராஜபக்ஷ குடும்பத்தினர் மாதிரி பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கத் தயாரில்லை.

தற்போதைய பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு கிடைக்கும் என்று கனவிலும் நினைக்கவே கூடாது. பொருளாதார நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றரை வருடங்களாவது தேவை. அதேவேளை, சர்வதேசமும் தொடர்ந்து உதவிகளை வழங்கினால்தான் குறித்த காலப்பகுதிக்குள் நாட்டை மீட்டெடுக்க முடியும்.

நான் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து நாட்டு மக்களுக்கு உண்மை நிலைவரத்தைத்தான் கூறி வருகின்றேன். எனது கருத்துக்களை எடுத்துக்காட்டி எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர். பிரச்சினைகளையும், இயலாமைமையும் கூறும் பிரதமர் எதற்கு என்று அவர்கள் பிரசாரம் செய்கின்றனர். இது அவர்களின் சிறுபிள்ளைத்தன அரசியலைக் காட்டுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை தம்பதியினர் மயக்க..

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையைச் சேர்ந்த வயது முதிர்ந்த கணவன், மனைவி இருவர் தனுஷ்கோடி கோதண்டராமர் கடற்கரைப் பகுதியில் நள்ளிரவு வந்து இறங்கி உள்ளனர்.

உணவு, தண்ணீர் இல்லாமல் மயங்கிய நிலையிலிருந்த இருவரையும் கரையோர பாதுகாப்பு பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் இருந்து இதுவரை 92 பேர் இந்தியாவுக்கு கடல் மூலமாக தப்பிச்சென்று தஞ்சம்கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மேலும், கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சித்த 399 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தனர்.

91 சந்தேக நபர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால், நபரொருவருக்கு 200,000 ரூபாய் வரை அபராதமும் ஐந்து வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்என்று பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காஞ்சன – நசீர் கட்டார் பயணம்; ரஷ்யா சென்றார்...

கட்டார் அரசாங்கத்திடம் இருந்து எரிபொருளைப் பெறுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடலுக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ரஷ்யா பயணித்துள்ளார் என்றும் அவருடன் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சமன் வீரசிங்கவும் ரஷ்யாவுக்கு சென்றுள்ளார் என, அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் பிரதிநிதிகள் இருவர் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா எம்மை ஆக்கிரமிக்க...

நாட்டின் வலுசக்தி துறை எப்போதுமே அரசாங்கத்திடமே இருக்க வேண்டும். எனினும் இன்றைய நெருக்கடி நிலைமையை பயன்படுத்தி வெவ்வேறு சர்வதேச நிறுவனங்கள் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள நினைக்கின்றன. நாட்டின் மின் உற்பத்தி, எரிபொருள் இறக்குமதி என்பவற்றை வெவ்வேறு நாடுகளுக்கு கொடுப்பது பாரிய நெருக்கடியை உருவாக்கும். இந்தியா இலங்கையின் வலுசக்தி வளங்களை கையாண்டால் அடுத்ததாக இலங்கையின் அரசியலையும் தீர்மானிக்கும் நிலைமை ஏற்படும். அவ்வாறான நகர்வுகள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன.

நாட்டின் நெருக்கடியை தீர்க்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஜனாதிபதி அதிகாரத்தில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நாம் அனைவரும் ஒன்றினை சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கினால் சர்வதேசத்தின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள முடியும். இன்று சர்வதேசத்தின் நம்பிக்கையை இழந்துள்ளோம். இந்தியாவின் நிவாரணம் முடிவுக்கு வரும் போது நெருக்கடிகள் உருவாக்கவும் அதுமட்டுமல்ல இந்தியாவின் 29 ஆவது பிராந்தியமாக இலங்கையை மாற்ற இடமளிக்க முடியாது. பெட்ரோலியம், உள்ளிட்ட வலுசக்தி வளங்களை இந்தியா கைப்பற்றிக்கொண்டு, இந்தியாவின் ரூபாவை இங்கு புழக்கத்தில் விட்டு இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சாதகமாக பயன்படுத்தி இந்தியா எம்மை ஆக்கிரமிக்க எடுக்கும் நடவடிக்கைகளை நாம் சகலரும் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும். ஆனால் தீர்வு காணும் பாதையை தெரிவு செய்யாது நெருக்கடியை மேலும் உருவாக்கும் பாதையையே அரசாங்கம் தெரிவு செய்வதாக தென்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## எரிபொருள் வரிசையை...

படுகாயமடைந்த ஐவரும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பஸ்ஸின் சாரதி அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ள பொலிஸார், சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.



# அரசாங்கம் மக்களை படுகொலை செய்கிறது

## இவர்களை சிறைக்கு தள்ளி, மக்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க வேண்டும்

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி ஆட்சியாளர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஆகவே, இன்று பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் அனைத்து உயிரிழப்புகளுக்கும் இந்தக் கொலைகாரர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓர் அடிமட்ட முட்டாள் என்பதை மீண்டும் நிரூபித்துக்கொண்டுள்ளார். அவரால் இனியும் ஜனாதிபதியாக நாட்டை நிர்வகிக்க முடியாது. அதற்கான தகுதி அவருக்கு இல்லை. நிர்வாகம் என்றால் என்னவென்றே அவருக்கு தெரியாது. எவரேனும் கூறும் காரணிகளுக்கு அமைய தீர்மானம் எடுக்கும் நிலைப்பாட்டிலேயே அவர் உள்ளார். நாட்டின் உண்மையான நிலைமைகளை அறிந்துகொள்ளாது நாட்டை நிர்வகித்துக்கொண்டுள்ளார்.



வழமைக்கு மாறாக அவரை ஆதரித்த மக்களே இன்று அவரை வெளியேறுமாறு வலியுறுத்துகின்றனர்.

ஜனாதிபதிக்கு நிகராக, ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்துள்ளார். நாட்டு மக்களால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட ஒருவரும், மக்களால் வெறியேற வலியுறுத்தப்படும் ஒருவரும் இணைந்து நாட்டை நிர்வகித்துக் கொண்டுள்ளனர். நெருக்கடி நிலைமையில் ஐந்து நிதியமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளனர், நான்கு அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு அமைச்சர்கள் மாற்றப்பட்டுள்ளனர். ஆனால் நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை.

நாட்டின் இன்றைய நிலைமை இயற்கையாக உருவானதல்ல. இந்த ஆட்சியாளர்கள் மூலமாக உருவாக்கப்பட்டது. ஆகவே, இந்த நெருக்கடிக்கு முகங்கொடுத்து மக்கள் உயிரிழப்பதும் திட்டமிட்ட கொலையாகவே அமையும். இந்த அரசாங்கம் மக்களை படுகொலை செய்துகொண்டுள்ளது. இதற்கு மன்னிப்பு கிடையாது. இன்று இடம்பெறும் அனைத்து உயிரிழப்புகளுக்கும் இந்தக் கொலைகாரர்கள் பொறுப்புக்கூற வேண்டும். இவர்களை சிறைக்கு தள்ளி, மக்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்காகவே ஆட்சி மாற்றம் ஒன்று வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம் என்றார்.

# டோக்கன் முறையில் வழங்க பெற்றோல் இருக்கிறதா?

■ பா.நிரோஸ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகிய இருவருமே தோல்விகண்டுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். எரிபொருளை வழங்குவதற்கு டோக்கன் முறை அறிமுகப்படுத்தப்படும் என அரசாங்கம் கூறினாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை எனவும் குற்றம் சுமத்தினார்.



இந்த வருடத்தின் மார்ச் மாதம் மாத்திரமே எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. ஏனைய அனைத்து மாதங்களிலும் எரிபொருள் விலையை இந்த அரசாங்கம் அதிகரித்து வந்துள்ளது. நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் எரிபொருள் விலை அதிகரிப்பதால் வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கும் என தெரிந்தும் அரசாங்கம் இதனை செய்கிறது. இதனால் 100க்கு 140 சதவீதம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாகவும் கூறினார்.

பணவீக்கத்தில் உலக அளவில் இலங்கைக்கு 2ஆவது இடம் கிடைத்துள்ளதாகவும் ஆசியாவில் பாகிஸ்தானையும் பின்தள்ளியுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், உணவுப் பஞ்சத்தை தவிர்ப்பதற்கு அடுத்த மூன்று நான்கு மாதங்களுக்குள் 8 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும், இதனைப் பெற்றுக்கொள்வதற்கான எந்த ஒரு கரிசனையும் அரசாங்கத்திடம் இல்லை எனவும் தெரிவித்தார்.

### யாழ் – தமிழ்நாடு இடையே

# சரக்கு படகு சேவைக்கு அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறைக்கும் தமிழ்நாட்டின் பாண்டிச்சேரிக்கும் இடையில் சரக்கு படகு சேவையை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தியப் பொருட்கள் நேரடியாக இலங்கையின் வட மாகாணத்துக்கு படகுச் சேவை மூலம் வந்தடையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேவையான எரிபொருள், மண்ணெண்ணெய், டீசல், உரம், சமையல் எண்ணெய், மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் படகு சேவை மூலம் இறக்குமதி செய்ய முடியும் என்றார்.

சரக்கு கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார்.

காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் துறைமுகங்களுக்கும் இடையே சரக்கு படகு சேவை இயக்கப்படும் என்றும் அமைச்சர் முன்னர் தெரிவித்திருந்தார்.

இதுமட்டுமின்றி, பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கும் திருச்சி, சென்னை ஆகிய தமிழக நகரங்களுக்கும் இடையிலான விமான சேவையை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அபிவிருத்திக்கான முடிவுகளை ஆட்சியாளர்கள் எடுக்கவேண்டும்



நிர்வாக முறையின் காரணமாகவே அரசாங்கம் வீழ்ச்சியை நோக்கி பயணித்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம் என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்பு அமைப்பாளரும் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான வை.பி.எம். ராம், எமது நாட்டின் அபிவிருத்திக்கான முடிவுகளை ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இன்று நமது நாட்டின் நிர்வாக அமைப்பில் ஒரு பலவீனத்தை காண்கிறோம். இதனால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அந்த சுமையை மக்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எந்நேரத்திலும் அரச நிர்வாகம் திட்டமிட்ட அடிப்படையில் நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் பாடுபடுவதை நாம் காணவில்லை.

சொல்லப்போனால் இன்று நம் நாட்டு மக்களும், குழந்தைகளும் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டியுள்ளது என்பதை நாம் அறிவோம். காலை வேளையில் எரிவாயு, மண்ணெண்ணெய் வரிசைகளை பார்க்கிறோம்.

மூலப்பொருட்கள் இல்லை. தொழில் உற்பத்தி எல்லாம் தடைப்படுகிறது. நாடும், பொருளாதாரமும் வளர்ச்சியடைய வேண்டுமானால், தொழில்கள் வளர்ச்சியடைய வேண்டும். உற்பத்தி பெருகி ஏற்றுமதி செய்வதன் மூலம் நாடுகளிலிருந்து டொலரை வரவழைக்க முடியும்.

குறிப்பாக, இன்று நம் நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு, தொழில்களை முன்கொண்டு செல்ல முடியாத நிலை உருவாகி இருப்பதை நாம் அறிவோம். இப்படியே போனால் நமது நாட்டை ஒரு போதும் அபிவிருத்தி செய்ய முடியாது என்றும் எச்சரித்தார்.




### கொள்கலன் போக்குவரத்துக் கட்டணம்

# 10 சதவீதத்தால் அதிகரிப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் கொள்கலன் போக்குவரத்துக் கட்டணங்களை 10 சதவீதத்தால் அதிகரிப்பதாக அகில இலங்கை ஐக்கிய கொள்கலன் போக்குவரத்து ஒன்றியம் அறிவித்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் எனவும் ஒன்றியத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க முடியாத நிலையில் தாம் விலை அதிகரிப்பை மேற்கொண்டு ஆகவேண்டியுள்ளதாகவும், துறைமுகங்களில் இருந்து அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் இருக்கின்ற போதிலும் எரிபொருள் விலை உயர்வு காரணமாக கொள்கலன் போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கெனவே, கடந்த மே மாதத்தில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போது கொள்கலன் போக்குவரத்துக்கான கட்டணம் 35 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மீண்டும் அக் கட்டணம் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அநுரவுக்கு 6 மாதங்கள் என்றால்

# ஒன்றிணைந்தால் 3 மாதங்களில் முடியும்

■ பா.நிரோஸ்

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் ஆறு மாதங்களில் நாட்டை மீட்க முடியும் என்றால், நாம் அனைவரும் அவரோடு ஒன்றிணைந்தால் மூன்று மாதங்களிலேயே நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க முடியும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் இங்கிலாந்துக்கு பயணமாகியுள்ளார். அங்கு 5 நட்சத்திர ஹோட்டலில் சுகபோகமாக தங்கியிருக்கிறார். நாடு பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகம் கொடுத்துவரும் இந்த நிலையில் இவ்வாறான செலவுகளை தவிர்க்க முடியும். குறைந்தது இங்கிலாந்திலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தின் தங்கி இருக்க முடியும்.



பிரதமர் பதவி, அமைச்சரவை என்பனவற்றை தமக்கு வழங்கினால் ஆறு மாதங்களில் நாட்டை நெருக்கடி நிலைமையிலிருந்து மீட்டு காட்டுவேன் என பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அநுரவுக்கு 6 மாதத்தில் முடியுமாக இருந்தால் நாம் எல்லோரும் ஒன்றாக இணையும் பட்சத்தில் வெறும் மூன்று மாதங்களிலேயே நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்க முடியும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# எரிவாயு அகழ்வுகளை விரைவுபடுத்த வழிகாட்டல்களை தயாரிக்கவும்

## கோபா குழு அதிகாரிகளுக்குப் பணிப்புரை




நாட்டின் நிலப்பகுதிக்குள் அகழ்வுகளை மேற்கொண்டு எரிவாயு மற்றும் மசகு எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்காக விரிவான தகவல்கள் அடங்கிய வழிகாட்டல்களைத் தயாரிக்குமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) பரிந்துரைத்தது.

> “ அகழ்வுகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நாட்டின் தேவைக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் இந்த அகழ்வுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் கோபா குழு ஆலோசனை வழங்கியது

இலங்கையில் திட்டமிடப்பட்டுள்ள இயற்கைத் திரவ எரிவாயுத் திட்டங்கள் (LNG) மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்கமளித்த அமைச்சின் அதிகாரிகள், இந்த அகழ்வாராய்ச்சிகளுக்குப் பல்வேறு தடைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினர். எனினும் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேறு நாடுகளின் ஆலோசனைகள் தேவையில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கமைய இந்த அகழ்வுகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நாட்டின் தேவைக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் இந்த அகழ்வுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் கோபா குழு ஆலோசனை வழங்கியது.

### ரணில் தோற்றால்

# 2 கோடி மக்களும் தோற்றுப்போவார்கள்

## வஜிர அபேவர்தன

பிரதமர் ரணில் தோல்வி அடைந்தால் நாட்டிலுள்ள 2 கோடி மக்களும் தோல்வியடைந்து விடுவார்கள் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். ரூபாயின் வீழ்ச்சியை கட்டுப்படுத்துவதற்குரிய நிதி கொள்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனை பார்த்துக்கொண்டிருக்க முடியாதவர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்துவிட்டதாக கூறுகிறார்கள். ரணில் தோற்றுவிட்டால், நாட்டிலுள்ள 2 கோடி மக்களும் தோற்றுவிடுவார்கள்.

இந்த வருடத்தின் செப்டெம்பர், நவம்பர் மாதத்தில் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 6 பில்லியன் நிதி உதவியை ரணில் கோரிவருகின்றார். இந்த 6 பில்லியனில் 5 பில்லியன் நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒரு பில்லியனை நாணயத்தை பலப்படுத்துவதற்கும் பயன்படுத்த ரணில் திட்டமிட்டுள்ளதாகவும் வஜிர இதன்போது தெரிவித்தார்.

# உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இலங்கை இராணுவத்தின் பங்களிப்பு

இலங்கை இராணுவ பசுமை விவசாய செயற்பாட்டு குழுவை தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே அண்மையில் ஆரம்பித்து வைத்தார். இலங்கை இராணுவ விவசாயம் மற்றும் கால்நடை பணிப்பகம் மற்றும் இலங்கை இராணுவ விவசாய மற்றும் கால்நடை படையணியினால் நாடளாவிய ரீதியில் 16 இராணுவப் பண்ணைகளில் விவசாயம் மேற்கொள்ளப்படுக்கின்றது. 1,063 ஏக்கர் நிலப்பரப்பில் அரசுக்கு சொந்தமான விவசாயம் மேற்கொள்ளாத நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையினை இலங்கை இராணுவம் மேற்கொள்ளும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் இதன் முதற்கட்டமாக 500 ஏக்கர் நிலப்பரப்பில் சோளப்பயிர் செய்கையை இலங்கை இராணுவம் ஆரம்பித்துள்ளது. அதன் படி தம்புத்தேகம இராணுவப் பண்ணையில் 100 ஏக்கர் சோளச் செய்கையை நேற்று (27) ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.







புலம்பெயர் உறவுகள் முதலிட வேண்டுமாயின்

# பாதுகாப்பு முக்கியம்

■ கே.எல்.ரி.யுதாஜித்



எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்களாயின் அவர்களுக்கும் அவர்கள் முதலிடும் பணத்துக்கும் இங்கு பாதுகாப்பு வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) அந்தவிதமான நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும். மாகாண சபைகளுக்கு நிதி அதிகாரங்களை வழங்குவதே ஒரே வழியாகும் என்றார்.

"அழிக்கப்பட்ட நமது பிரதேசங்கள் தற்போது படிப்படியாக வளர்ச்சியுற்று வருகின்றன. ஆனால், நமது மக்களின் வாழ்வாதாரம் உயரவில்லை. புலம்பெயர் தேசத்தில், எமது மக்கள் பலர் பெரிய செல்வந்தர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் நினைத்தால் வடக்கு- கிழக்குப் பிரதேசத்தில் இருக்கும் எமது மக்களின் வறுமையை ஒழிக்கலாம். நலிவுற்ற எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தலாம். ஆனால், அவர்களுக்கு மனம் இருந்தாலும் அதற்கான களம் இல்லாமல் இருக்கின்றது" என்றார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற 'உதவும் உறவுகள்' அமைப்பின் 13ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இந்த நாடு பொருளாதார ரீதியில் அதளபாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், புலம்பெயர் தேசத்தில் வாழும் எமது தமிழ் மக்களை இங்கு முதலீடுகளை மேற்காள்ளுமாறு இலங்கையின் ஆட்சியாளர்கள் அழைக்கின்றார்கள்.

இன்றைய இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு என்ன காரணம் என்பது ஒரு சிறு பிள்ளைக்குக் கூடத் தெரியும். அரசாங்கத்திற்கு அந்தக் காரணம் தெரிந்திருந்தும் அந்த அடிப்படைக் காரணத்தைப் புரிந்து கொள்ளாமல், புலம்பெயர் தமிழர்கள் டொலர் கொண்டுவர வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறு முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அதற்கும் மேலாக அவர்கள் முதலிடும் பணத்திற்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அந்தவிதமான நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும் என்றார்.




கிழக்கு மாகாண ஆளுநருக்கு

# 'சிங்களச் சந்தை' ஆர்வம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை 'சிங்களச் சந்தை' எனக் குறிப்பிடுவதில் ஆளுநர் ஆர்வமாக உள்ளார் என பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கங்களிலும் இதர சமூக வலைத் தளங்களிலும், ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை 'சிங்களச் சந்தை' எனக் குறிப்பிட்டு வருவதாக ஏறாவூர் நகர சபை உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஞாயிறன்றும் 26.06.2022 ஆளுநரின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட 'ஏறாவூர் சிங்களச் சந்தை' விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

இது குறித்து உடனடியாக எதிர் வினையாற்றிய ஏறாவூர் நகர சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். ஸரூஜ், 'நீங்கள் குறிப்பிட்டது போன்று அல்ல; ஏறாவூர் நகர சபைக்குச் சொந்தமானது. அது எப்போதும் பொதுச் சந்தை தான். அது சிங்களச் சந்தையல்ல. எனவே இதனை மாற்றிக் கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டிருந்தார். இந்த எதிர்வினைக்குப் பின்னர் ஆளுநரின் செய்திக் குறிப்பில் 'ஏறாவூர் பொதுச் சந்தை' என மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் 2021.11.11 அன்று ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை 'சிங்களச் சந்தை' எனக் குறிப்பிட்டு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் 'பெக்ஸ்' அனுப்பிய விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்கி, எதிர்வினையாற்றியதன் விளைவாக நகர சபை பொதுச் சந்தை என ஆளுநர் மாற்றிக் கொண்டதாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

ஆயினும், எல்லோருக்கும் பொதுவான ஏறாவூர் நகர சபைக்குரிய பொதுச் சந்தையை 'ஏறாவூர் சிங்களச் சந்தை' என ஆளுநர் அடிக்கடி உச்சரிப்பது மறைவான உள்நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதாக, பிரதேச தமிழ் பேசும் மக்கள் தெரிவிக்கின்றனர். இனவாதத்தின் காரணமாக நாடு வங்குறோத்து நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் இந்தத் தறுவாயிலும் கூட, ஒரு பொதுச் சந்தையை பேரினவாத உடமையாகச் சிந்திப்பது வேதனையளிப்பதாக ஆர்வலர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

# உதவும் கரங்கள்

■ எம். எஸ். எம். நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் சமூகத் தொண்டு நிறுவனங்களில் ஒன்றான 'வழி தேடும் சிறுவர்களின் ஒளியாக மிளிரும்' கிழக்கு சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் உதவும்கரங்கள் அமைப்பு, பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்துவரும் வறிய குடும்பங்களுக்கு உலருணவு பொதிகளை வழங்கி வைத்தது.

உதவும்கரங்கள் அமைப்பின் தலைவர் எஸ். ஜெயராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் 80 குடும்பங்களுக்கு ரூ.5,000க்கும் அதிகமான பெறுமதிமிக்க நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



கிழக்கு மாகாணத்துக்கும்

# பிரச்சினைகள் உள்ளன

## எடுத்தியம்பினார் இம்ரான் எம்.பி

■ எப்.முபாரக், ஒலுமுதீன் கியாஸ்

பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் உள்ளிட்ட சகல பிரச்சினைகளுக்கும் கிழக்கு மாகாண மக்களும் முகங்கொடுக்கின்றனர் என்று தெரிவித்துள்ள திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், ஆனாலும் எந்தவொரு பிரச்சினையும் இல்லையென காண்பிக்கவே கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத் முயல்கின்றார் என குற்றஞ்சாட்டினார்.

எரிபொருள் நெருக்கடி காரணமாக இவ்வாரம் கிழக்கு மாகாணப் பாடசாலைகள் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய கிழமைகளில் மாத்திரம் நடைபெறுமென கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி என். புள்ளநாயகம் தகவல் வெளியிட்டிருந்தார். சில மணித்தியாலயங்களுள் வாரத்தில் 5 தினங்களும் பாடசாலை நடைபெறுமென அதே மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அவரது இந்தப் பின்னைய அறிவிப்புக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



எரிபொருள் நிரப்புவதற்காக அதிபர், ஆசிரியர்கள் நாட்கணக்கில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்து நிற்கின்றனர். மாணவர் பஸ்சேவைக்கு எரிபொருள் இல்லை. இதனால் தான் நகர்ப்புறப் பாடசாலைகளை மூடும் தீர்மானம் கல்வி அமைச்சால்எடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையென அவர் காட்ட முனைவதே அவரது இந்த முடிவுக்குக் காரணமாகும். அவரதும், அவரது பரிவாரத்தினரதும் வாகனங்களுக்கும் எரிபொருள் பிரச்சினை இல்லை என்பதால் ஏனையோருக்கும் அப்படி இருப்பதாகவே அவர் நினைக்கிறார். மக்கள் படும் கஷ்ட நிலையை இன்னும் அவர் உணரவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

# மாவடிவேம்பில் வசமாக சிக்கின

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிவேம்பில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு எரிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ். பண்டார தெரிவித்தார்.

அவரது தலைமையில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 550 லீற்றர் டீசல், 258 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மாவடிவேம்பு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள இடமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.



இலங்கையின் வடபகுதியை

# இந்தியாவுக்கு விற்க முயற்சி?

■ என்.ராஜ்


தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், வடபகுதியை இந்திய அரசுக்கு விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, மன்னார் மாவட்ட மீனவ சங்கத் தலைவர் மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற அரசியல் ஸ்திரமற்ற நிலை, எரிபொருள் தட்டுப்பாடு, இதேபோல் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்சாரம், அதானி குரூப் எடுத்துள்ள காற்றாலை மின்சாரத் திட்டம், ஏனைய விடயங்கள், கனியவள மண் அகழ்வு என மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சமகாலத்தில் பல உள்ளன என்றார்.

மன்னார் மாவட்டத்தில் அதானி குரூப் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் இந்திய குழுவொன்று கடந்த வியாழக்கிழமை வந்து ஆராய்ந்து சென்றிருக்கின்றது. தற்பொழுது இலங்கையில் உள்ள வளங்களை சரியாகப் பயன்படுத்த இலங்கை அரசுக்கு தெரியவில்லை.

காலத்துக்கு ஏற்றவாறு எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு, முடிவுகள் எடுக்கப்படாமையால் நாடு வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. அதானி என்பவர் இந்தியாவில் பாரியபணம் படைத்த ஒரு பெரிய தொழிலதிபர். அங்கே அவருக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளன. அவரைக் கொண்டு வந்து, வடபகுதியை விற்க போகின்றார்கள். நிச்சயமாக, தற்போதுள்ள சூழ்நிலையில் வடபகுதியினை அபிவிருத்தி செய்வதாகக் கூறி, திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்தியாவுக்கு வடபகுதியினை விற்க போகின்றார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

# சிறுமி துஷ்பிரயோகம்; யாழில் முதியவர் கைது



■ செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், 59 வயது முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாயார் ஞாயிற்றுக்கிழமை (26) அன்று நிகழ்வு ஒன்றுக்கு சென்றிருந்த வேளை, பக்கத்து வீட்டு முதியவர் சிறுமியை அறைக்குள் அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளார். தனக்கு நேர்ந்ததை அந்த சிறுமி தாயிடம் தெரிவித்துள்ளார்.

தாயார் இந்த விடயம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய, முதியவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முதியவரை யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# பச்சை நிறத்தில் நீச்சல் தடாகம்

## பார்ப்பாருமில்லை, கேட்பாருமில்லையென புகார்

யாழ்ப்பாணம், மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் பராமரிப்பு இன்றி, பாசி படர்ந்து, பாழடையும் நிலையில் காணப்படுகிறது.

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பால் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட நீச்சல் தடாகத்தை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து சில மாத காலம் மாணவர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. பின்னரான கால பகுதியில் நீச்சல் தடாகம் பராமரிப்பு இன்றி கைவிடப்பட்டது. ஆடைகள் மாற்றும் அறைகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த நீச்சல் தடாக புனரமைப்பு, தொடர் பராமரிப்பு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து , நீச்சல் தடாகத்தை புனரமைத்து சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது.

2021வருடம் ஜூன் மாதம் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ். மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தையும் பார்வையிட்டு சென்றிருந்தார்.

இந்நிலையில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டு, ஜனாதிபதி, பிரதமரின் இணக்கம் தெரிவிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்த நிலையிலும் இன்னமும் நீச்சல் தடாக புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கவிடவில்லை.

பெரும் செலவில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை பராமரிக்க ஒரு பொறிமுறை உருவாக்கப்படவில்லை என பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

# வைத்திசாலை களஞ்சிய அறையில் தீ பரவல்

■ செந்தூரன் பிரதீபன்

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு அருகில் உள்ள மருத்துவ களஞ்சிய அறையில் ஏற்பட்ட தீ பரவலால் களஞ்சிய அறையில் இருந்த அனேகமான மருந்துப் பொருட்கள் எரிந்து நாசமாகி உள்ளன.

மின்னொழுக்கு காரணமாக இந்தத் தீ பரவல் இடம்பெற்றதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. விரைந்து சென்று தீயைக் கட்டுப்படுத்திய இராணுவச் சிப்பாயின் செயலை பலரும் பாராட்டியுள்ளனர்.



# குழப்பமான பதிவால் குழம்பிய மக்கள்



■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில், மண்ணெண்ணெய் விநியோகத்துக்கு என இராணுவத்தினர் நேற்று (27) காலை முதல் பதிவுகளை மேற்கொண்டமையால் சிறிது நேரம் குழப்பம் ஏற்பட்டது.

அதனை கேள்வியுற்று பலர் பதிவுகளை மேற்கொள்ள முண்டியடித்தனர். அதன்போது எரிபொருள் நிரப்பு நிலையத்தினர், விவசாயிகளுக்கு விநியோகிக்கவே மண்ணெண்ணெய் உள்ளது எனவும், ஏனையோருக்கு வழங்க முடியாது எனவும் கூறினார்கள். அதனையும் பொருட்படுத்தாது இராணுவத்தினர் பதிவுகளை முன்னெடுத்தனர்.

அதனை அடுத்து குறித்த விடயம் தொடர்பில், கோப்பாய் பிரதேச செயலாளருக்கும் புத்தூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாருக்கும் அறிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து, விவசாயிகளுக்கு மாத்திரமே மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்க உள்ளோம். ஏனையோருக்கு விநியோகிக்க முடியாதென இராணுவத்தினருக்கு தெரிவித்ததை அடுத்து, இராணுவத்தினர் பதிவு நடவடிக்கைகளை இடைநிறுத்தினார்கள்.





## சான்றிதழ் வழங்கப்பட்டது

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட, இரண்டாம் மொழி தமிழ்மொழி பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நேற்று (27) பதுளை மாவட்ட செயலகத்தில், பதுளை மாவட்ட தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத்தியோகத்தர் முஷரப் தலைமையில் நடைபெற்றது.

(சுரேஸ்குமார்)






## வருடாந்த திருவிழா

நானுஓயா, டெஸ்போட் திருஇருதய ஆண்டவர் தேவாலய வருடாந்த திருவிழா, வெள்ளிக்கிழமை (24) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

(டி.சந்ரு)



## அன்பளிப்பு

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மருதுபாண்டி ராமேஸ்வரனின் நிதியுதவியில், கிருஷ்ணன் ஜூனியர் பாடசாலை, டெல்மார் பாடசாலை, எமஸ்ட் பாடசாலை, மகாவுவா, சூரியக்காப்பத்தனை ஆகிய பாடசாலைகளுக்கு நகல் பிரதி இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(ஆ. ரமேஸ்)





## போஷாக்கு பொதிகள் வழங்கப்பட்டன

சதாநந்தன் திருமுருகன் தலைமையில் இயங்கிவரும், விஷ்னு ஆரோஹணம் சமூக சேவைகள் மன்றத்தின் ஊடாக, கொட்டகலை, பிட்டவின் தமிழ் வித்தியாலயத்தில் 60 சிறார்களுக்கும் தலவாக்கலை, டீ மலை தோட்டத்தைச் சேர்ந்த 50 சிறார்களுக்கும் வலஹா பகுதியை சேர்ந்த 60 சிறார்களுக்கும் போஷாக்குப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

---

தோட்ட காணிகள் பகிர்வானது

# ஆபத்தானது

இன்று, நாட்டின் அரசாங்கம் யாருடையது, யாருடைய தலைமையில், கட்டுப்பாட்டில் அரசாங்கமும் அரச நிர்வாகமும் செயற்படுகின்றது என்பன தெளிவற்ற நிலையிலேயே உள்ளது எனத் தெரிவித்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார், அரசியல் ஸ்திரமற்ற நிலையில் தோட்ட காணிகளின் பகிர்வு தொடர்பாக பேசுவது ஆபத்தானதாகும் என்றார்.

பங்கரில் ஜனாதிபதி இருந்துகொண்டு, தனது நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் முயற்சியில் உள்ளார். பிரதமர் தனது கட்சி சார்ந்த சகாக்களை சேர்த்துக்கொண்டு, தனது கட்சியின் நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பதில் உள்ளார். இவ்வாறான அரசியல் ஸ்திரமற்ற நிலையில், தோட்ட காணிகளின் பகிர்வு தொடர்பாக பேசுவது ஆபத்தானதாகும் என்றார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர் கூறியதாவது:

மலையக பிரதேசங்களில் உள்ள பயிரிடப்படாத தோட்ட காணிகள் என்பது, பல காலமாக பேசப்பட்டு வரும் ஒரு விடயம். இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கும் உணவு பஞ்சத்துடன் மீண்டும் இவ்விடயம் பேசப்படுகின்றது. கடந்த காலம் முழுவதும் தோட்ட காணிகளின் பகிர்வில் தோட்ட மக்களுக்கு பாராபட்சம் காட்டப்பட்டு வந்துள்ளது. எல்லா பகுதிகளிலும் போல வெளியாருக்கே பெருமளவு நிலங்கள் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இச்சூழ்நிலையில், இன்றைய அரசாங்கத்தில் மலையக பிரதிநிதிகள் எவரும் இல்லை. இருந்த சிலர் சுயாதீனமாகிவிட்டதாக கூறுகின்றனர். அரச தலைமைத்துவம் யாருடையதென்பதும் கேள்விக்குறியாக உள்ளது.



இச்சூழ்நிலையில் தோட்ட காணிகளின் பகிர்வு பற்றி பேசுவது, நாமே எம்மை காட்டி கொடுப்பது போன்றதாகிவிடும். கண்டி மாவட்டத்தில் கலபொட தோட்டம், தெல்தோட்டை தோட்டம், போஹில் தோட்டம், கிரேட் வெளி தோட்டங்களில் பெருவாரியான நிலங்கள் வெளியாருக்கு கொடுக்கும் ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துள்ளது. அதேபோன்று, வுட்சைட் தோட்டம், கல்தூரியா தோட்டம் போன்றவைகளின் காணி சுவீகரிப்பு தொடர்பாகவும் பல முரண்பாட்டு நிலைமை உள்ளது.இவற்றை எல்லாம் தடுத்து நிறுத்தி, தோட்ட காணிகளைப் பாதுகாத்து, தோட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு அவற்றை வழங்க வேண்டும். அதை விடுத்து இன்று நிலவும் பலவீனமான அரசியல் சூழலில் தோட்ட காணிகளின் பகிர்வுக்கு முற்படுவது பெரும்பான்மை அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றவே வாய்ப்பாக அமையும் என்றார்.

## கொட்டகலையில் 1,000 லீற்றர் டீசல் சிக்கியது



■ எஸ்.கணேசன்

கொட்டகலை, கொமர்ஷல் பகுதியிலுள்ள மொத்த வியாபார நிலையமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆயிரம் லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஐந்து பெரல்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த டீசல், திம்புள்ள - பத்தனை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (26) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்தில் எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக திம்புள்ள - பத்தன பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையில், சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆயிரம் லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சட்ட நடவடிக்கைக்காக அவர், ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார்.

“நாங்கள் மொத்த வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள். போக்குவரத்து சேவைக்கு எமக்கு டீசல் தேவை. அதற்காகவே சேமித்து வைக்கப்பட்டது” என கைதானவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை திம்புள்ள - பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரே வாரத்தில் நால்வர்

## தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர்

■ சுமணசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் நால்வர் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர் என, மொனராகலை வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய மொனராகலை, ஹிந்திகிவுல பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதான பாடசாலை மாணவியும் தொம்பகஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான இளைஞரும் பீல்லவெல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயது நபரும் கல்வெலபார பகுதியைச் சேர்ந்த 22 வயதான ஒரு பிள்ளையின் தாயும் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பப் பிரச்சினை, காதல் தொடர்பு, பொருளாதார பிரச்சினைகள் காரணமாகவே இவர்கள், தம்முயிரை மாய்த்துக்கொண்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பயிற்சிக்கு சென்றவர்

## யானை தாக்கி உயிரிழந்தார்

■ சேஹ்ன் செனவிரத்ன



கலஹா இலங்கை வங்கி கிளையின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த அதிகாரியொருவர்,யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், பயிற்சி ஒன்றுக்காக விக்டோரியா இராணுவ முகாமுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 49 வயதுடையவர் என்றும் இவர் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்று, வங்கியில் பாதுகாப்பு பணியாளராக இணைந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்து 5.30 மணிக்கு புறப்பட்டுச் சென்ற இவர், 5.45 மணியளவில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹங்குராங்கெத்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஹட்டனில் டோக்கன் வழங்கப்பட்டது



■ எஸ்.கணேசன்

இலங்கையில் எரிபொருள் நெருக்கடி தலைதூக்கியுள்ள நிலையில், நிலைமையை கட்டுப்படுத்தும் வகையில் நேற்று (27) முதல் ‘டோக்கன்’ முறையின் கீழ் எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியது.

இதற்கமைய, ஹட்டன் நகரிலுள்ள மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும், எரிபொருள் பெறுவதற்காக வருகை தந்திருந்தவர்களுக்கு ‘ டோக்கன்’ வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக ஹட்டன் பொலிஸாரால் குறிப்பு புத்தகமொன்றும் வழங்கப்பட்டுள்ளது. பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பன அதன்மூலம் சேகரிக்கப்படுகின்றன.

ஒரு வாகனம் ஒரே நாளில் பல தடவைகள் எரிபொருளை பெறுவதை தடுத்தல், வரிசைகளை குறைத்தல் உள்ளிட்டவையே இந்நடவடிக்கையின் பிரதான நோக்கமென அறிவிக்கப்பட்டுள்ளது.

டயர், பெட்டரி பிரச்சினைக்குத் தீர்வு கோரி

## எதிர்ப்பு நடவடிக்கை

■ பாலித ஆரியவன்ஸ



இ.போ.ச பஸ்களுக்கு டயர், பெட்டரி இன்மை காரணமாக பதுளை டிப்போவில் 50 சதவீதமான பஸ்கள் சேவையில் இருந்து விலகியுள்ள நிலையில், அதற்கு அதிகாரிகள் இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை எனத் தெரிவித்து, நேற்று (27) எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் ஊவா மாகாண பிரதான அலுவலகம் மற்றும் பதுளை டிப்போ பணியாளர்கள் இணைந்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் பேரணியாக பதுளை மத்திய பஸ் தரிப்பிடம் வரை சென்றனர்.

50 சதவீதமான பஸ்கள் சேவையில் இருந்து விலகியுள்ளதால் பயணிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி இருப்பதாகவும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# எதைச் சேமிக்க வேண்டுமென்ற விவஸ்தை வேண்டாமா?

பொதியிடப்பட்டிருக்கும் பொருட்களின் விலைகளை ஞாபகத்தில் வைத்திருக்க முடியாத அளவுக்கு, பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. 'எரிபொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம்' என்ற செய்தியைக் கேட்டவுடனேயே, வர்த்தகர்கள் பலரும் விலைகளை மாற்றத் தொடங்கிவிடுவர்.

அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துவிதமான பொருட்களின் விலைகளும் தங்களுக்கு ஏற்றவாறு மாற்றப்படுகின்றன. 'இந்தக் கடை இல்லாவிடின் என்ன? அடுத்த கடையில் வாங்கிக்கொள்வோம்' என நினைக்கவோ, வர்த்தகர்களுடன் பேரம் பேசுவதற்கோ நுகர்வோர் விரும்புவதே இல்லை. ஏனெனில், அடுத்தடுத்த கடைகளில் இல்லாவிடின், வெறுங்கையுடன் வீட்டுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுமென்ற அச்சம் சூழ்கொண்டுவிடும்.

எனினும், மிகவும் குறைந்தவிலையில் கிடைக்கும் அத்தியாவசியமான பொருட்களை பெரும்பாலானவர்கள் சேமித்துக்கொள்கின்றனர். கையில் தேவைக்கு மேலதிகமாக பணம் இருப்பவர்கள், பற்பசை, சவர்க்காரம் உள்ளிட்டப் பொருட்களை இரண்டொரு மாதங்களுக்கு கூடுதலாக வாங்கிக்கொள்வர். இதனை பார்த்ததும், தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ அல்லது விலை அதிகரித்துவிடுமோ எனும் அச்சத்தில் சிலர் வாங்கிக்கொள்வர்.

அரிசி, நெல் உள்ளிட்டவற்றையும் வாங்கி வைத்துக்கொள்வோரும் இருக்கத்தான் செய்வார்கள். எனினும், அரிசியை பல மாதங்களுக்கு வைத்திருக்கமுடியாது என்பது பலருக்கும் புரிவதே இல்லை. அதற்குப் பதிலாக, ஓரிரு மாதங்களுக்கு வைத்து சாப்பிடக்கூடிய தின்பண்டங்களை தயாரித்துக்கொள்வது உசிதமானது.

அதைத் தயாரிப்பதற்கும் எரிபொருள் தேவை. அதற்காக நின்றிருக்கும் வரிசைகள் குறையவே இல்லை. எரிபொருட்களை பதுக்கி வைப்பதும் குறைவில்லாம் நடக்கிறது. பதுக்கிவைக்கும் எரிபொருட்களை தேடும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஓட்டோவில் எரிபொருள் தாங்கி இருக்கும் பகுதியில், 20 லீற்றர் கொள்ளவு கொண்ட, பெரிய கேன் ஒன்றை வைத்து எரிபொருள் நிரப்பப்பட்டும் உள்ளன.

இதற்கிடையில், விரைவில் தீப்பற்றிக் கொள்ளும் எரிபொருட்களை வீடுகளில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைப்பதால் உயிராபத்துகளும் ஏற்படுகின்றன. கஹதுடுவ, மாகம்மன எனுமிடத்தில் கீழ்மாடியில் இருந்து திடீரென பரவிய தீயால், தாயும் தந்தையும் மரணித்துள்ளனர். அவ்விருவரின் இரண்டு பெண் பிள்ளைகளும் கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்மாடியில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைத்திருந்த பெற்றோலில் இருந்தே தீ பரவியிருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. ஆகையால், தேவைக்கு மட்டுமே கொள்வனவு செய்துகொண்டு பயன்படுத்தினால், இவ்வாறான மரணங்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி, பதுக்கிவைத்திருந்து பன்மடங்கு விலைக்கு எரிபொருட்களை விற்பனைச் செய்வோரும், அதனை வாங்குவோரும் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வளவுக்கு அவசரம் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆக, சேமிக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், காலத்துக்கு ஏற்றவகையில் சேமிப்பில் கவனம் செலுத்துவதே முக்கியம். எரிபொருட்களை சேமித்தல் சட்டவிரோதமானதும் பாதுகாப்பற்றதும் என்பதை நினைவில் கொள்க!


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# பிடில் வாசிக்கும் நவீன நீரோக்கள்

மொஹமட் பாதுஷா

உரோம் நகரம் பற்றி எரிந்த போது, நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தார் என்று சொல்வார்கள். அதுபோல, இலங்கை மக்கள் பெரும் அவலத்தைச் சந்தித்துள்ள இக்காலப் பகுதியில், ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, பொறுப்பு வாய்ந்த எல்லாத் தரப்புகளும், கிட்டத்தட்ட பிடில் வாசிக்கும் நவீனகால நீரோக்கள் போலவே செயற்படுகின்றன.

வரலாற்றில் என்றுமில்லாத பொருளாதார நெருக்கடியையும் பொருட்களின் தட்டுப்பாட்டையும் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். பிரகடனப்படுத்தப்படாத ஒரு வறுமை, பட்டினியை நாடு சந்தித்துள்ளது. இந்த நிலைமை, இன்னும் மோசமடைந்து வருகின்றதே தவிர, எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

வரிசைகளின் யுகம் நீள்கின்றது. சந்தையிலேயே கிடைக்காத பொருட்களுக்கும் விலை ஏற்றப்படுகின்ற அதிசயம் எல்லாம், இலங்கையில் மட்டும்தான் நடக்கின்றது. நாட்டையும் மக்களையும் இந்த நெருக்கடிக்குள் இருந்து, இவர்கள் மீட்டெடுப்பார்கள் என்ற நம்பிக்கை, மக்களிடையே குறைவடைந்து கொண்டே செல்கின்றது.

ஒரு கதை சொல்வார்கள், மாட்டைப் பற்றி ஒருவரிடம் கட்டுரை எழுதச் சொன்ன போது, மாட்டை மரத்தில் கட்டிவைத்துவிட்டு, அந்த மரத்தைப் பற்றியே எழுதியதாக அந்தக் கதை வரும். அதே பாணியிலேயே அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதாவது, நாட்டு மக்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் எடுங்கள் என்று அதிகாரங்களைக் கொடுத்து, பதவிகளுக்கு ஆட்களை நியமித்தால், அவர்கள் வேறு என்னவோ இரண்டாம் பட்சமான விவகாரங்களில் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இப்படித்தான் கோட்டாபய - மஹிந்த அரசாங்கம் செயற்பட்டது. இப்போது கோட்டாபய - ரணில் அரசாங்கமும், ஏதோ ஒருவகையில் அதே வழித்தடத்தில் பயணிப்பதாகவே தோன்றுகின்றது.

பெரும்பான்மைப் பலத்தை தமக்குத் தந்தால், நாட்டை வெற்றிகரமாக ஆட்சி செய்வோம் என்று ராஜபக்ஷ குடும்பம் கூறியது. அது கிடைத்தவுடன் 20 ஆவது திருத்தத்தின் ஊடான அதிகாரங்கள் வேண்டும் என்றது; அதுவும் கொடுக்கப்பட்டது.

இவை இரண்டும் கிடைத்தவுடன், ராஜபக்ஷவினருக்கு தலைகால் புரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினர். அப்போதுதான் கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து, பொருளாதார நெருக்கடி தலைதூக்கத் தொடங்கியது.

நாட்டில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தப் போகின்றது என்பதை, அன்றே நோக்கர்கள் தெளிவாகவே சொன்னார்கள். ஆனால், உச்சாணிக் கொம்பில் நின்ற ராஜபக்ஷவினர் அதையெல்லாம் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. மாறாக, 'பசிலை எம்.பியாக்க, அமைச்சராக்க வேண்டும்' என்றனர்.

அமெரிக்கப் பிரஜாவுரிமையை துறக்க விரும்பாத பசிலுக்காக இலங்கையின் அரசியலமைப்பே திருத்தப்பட்டது. அதாவது, அமெரிக்காவின் பிரஜாவுரிமையில் இருந்து நீங்குவதை விட, இலங்கையின் அரசியலமைப்பை மாற்றுவது இலகுவான காரியம் என்று ராஜபக்ஷ குடும்பம் எண்ணி இருக்கின்றார்கள் என்றால், இலங்கையை எவ்வளவு மட்டமாக கருதியிருக்கின்றார்கள் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

'பல மூளைகளைக் கொண்டவர்' என வர்ணிக்கப்பட்ட பசில் ராஜபக்ஷ, நிதி அமைச்சரானார். ஆனால், குறைந்தபட்சம் எரிபொருள் விலையையாவது அவரால் குறைக்க முடியவில்லை. உண்மையாகச் சொன்னால், அவர் வந்த பிறகுதான் நிலைமைகள் மிக மோசமடைந்தன.

செய்வதையெல்லாம் செய்து விட்டு, இப்போது "69 இலட்சம் மக்களும் பொறுப்புக்கூற வேண்டும்" என்று நக்கலாகச் சொல்கின்றார்கள் என்றால், எந்தளவுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமலும், கவலையில்லாமலும் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

ஒரு கட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமாச் செய்தார். மக்கள் எழுச்சியை அடக்குவதற்கும், கோட்டாபயவின் நிகழ்கால அரசியலையும் நாமலின் எதிர்கால அரசியலையும் காப்பாற்ற அவர், இந்த முடிவை எடுத்தார். அது ஓரளவுக்கு வெற்றியளித்தும் உள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே ராஜபக்ஷவினரின் திரைக் கதையில், கௌரவத் தோற்றத்தில் நடிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க உள்ளே வருகின்றார். அதாவது, 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற அரசாங்கத்தின் பிரதமர் பதவி விலகி, வேறு பொருத்தமான யாரும் இல்லை என்ற நிலையில், ஐ.தே.கவின் ஒரேயொரு தேசிய பட்டியல் எம்.பியான ரணில், இந்தக் கதைக்குள் வந்தார்.

திட்டமிடப்பட்ட போராட்டங்கள், திடீரென அடங்கிப் போயின. அப்போதுதான் இதற்குப் பின்னால் இருக்கின்ற புவிசார் ஆதிக்க அரசியலும் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளின் வகிபாகங்களும் மக்களுக்குப் புரிந்தன.

ஆனாலும் என்ன? ரணில் வந்தவுடன் சில நல்ல மாற்றங்கள் ஏற்படுவதான தோற்றப்பாடு உருவானாலும், உண்மையில் நிலைமை முன்னரை விட மோசமடைந்தே இருக்கின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தை காப்பாற்றியதில் ரணில் 'பாஸ்' எனலாம். ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் 'பெயிலாகி' விடுவாரோ என எண்ணுமளவுக்கு நாட்டின் யதார்த்த நிலைமைகள் உள்ளன.

இந்த நிலைமையில் கூட மக்களுக்கு நம்பிக்கை தரும் எந்த நடவடிக்கையையும் கோட்டபாய - ரணில் அரசாங்கம் எடுத்ததாக ஆறுதல் கொள்ள முடியவில்லை. குறைந்தபட்சம் நம்பிக்கையூட்டும் அறிக்கையையாவது வெளியிடவில்லை.

மாறாக, "இன்னும் கஸ்டங்கள் வரும்", "நிலைமைகள் மோசமடையலாம்", "தியாகங்களைச் செய்வதற்கு தயாராக இருங்கள்" என்றுதான் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

அறுதிப் பெரும்பான்மை, 20ஆவது திருத்தம், பசில் ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க என்ற வரிசையில் இப்போது, அடுத்த பாரிகாரியாக தம்மிக பெரேரா களமிறக்கப்பட்டுள்ளார். இவரது வருகை பொருளாதாரத்திலும் சமூக கலாசார விழுமியங்களிலும் எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பதை இன்னும் கொஞ்சக் காலத்தில் கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

எது எவ்வாறிருப்பினும், நாட்டில் நெருக்கடிகள் புகையத் தொடங்கிய காலத்தில் ராஜபக்ஷவினர் விரைந்து செயற்படாமல் விட்டதாலும், தீப்பிடித்த பிறகு கூட, அதைப் பொருட்படுத்தாமல் இருந்தமையாலும், இந்த நெருக்கடிகள் இந்தளவுக்கு பாரதூரமான நிலைக்கு வந்துள்ளன.

கோட்டாபய - ரணில் அரசாங்கமும் அதேபாணியில் பிடில் வாசிக்கத் தொடங்கி இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இதே வேலையைத்தான் எதிர்க்கட்சி மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் அரசியல் அணிகளும் முன்னரும் செய்தன; இப்போதும் செய்து கொண்டிருக்கின்றன. மக்களைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல், அரசியல் இலாபம் தேடுவதிலேயே குறியாக இருக்கின்றார்கள்.

மக்களுக்கு இன்று தேவையாக இருப்பது, இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஓர் அவசர மீட்புத் திட்டமாகும். ஆனால், அதற்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவத்தை விட, வேறு விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றன.

அரசியல்வாதிகள், ஆட்சியாளர்களை திருத்துவதை விடுத்து, அரசியலமைப்பை திருத்தினால் எல்லாம் சரியாகிவிடும் என்பது போல், 21ஆவது திருத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். தேர்தல் நடத்த வேண்டும்; ஆட்சி மாற்றம் வேண்டும் என்றும் சிலர் கூறி வருகின்றார்கள்.

இந்த நிலைமையில் கூட, பலமற்ற எதிர்க்கட்சி ஆட்சியை தங்களிடம் ஒப்படைக்குமாறு கூறுகின்றது. ரணில் வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னவர்களும் 'ரணில் சரிப்பட்டு வரமாட்டார்' என்ற தொனியில் பேசுகின்றார்கள்.

மக்கள் உண்பதற்கும் வாழ்வதற்கும் நாதியற்று அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் காலத்திலேயே ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் இவ்விதம் செயற்படுகின்றனர். மக்களை மறந்த இந்த அணுகுமுறையானது, மக்களை நாளுக்குநாள் இன்னும் அதிகமான நெருக்கடிக்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான பின்புலத்திலும் பெருந்தேசிய தலைவர்கள் தான் இப்படிச் செயற்படுகின்றார்கள் என்றால், முஸ்லிம் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிடில் வாசித்துக் கொண்டுதான் நிற்கின்றார்கள்.

மக்களின் பிரச்சினைக்காக குரல் கொடுக்கவோ அல்லது தனிப்பட்ட அடிப்படையில் மக்களுக்கு உதவுவதற்கோ, முஸ்லிம் எம்.பிக்கள் முன்வரவில்லை. அவர்கள் அரசாங்கத்தின் பக்கமா, மக்களின் பக்கமா நிற்கின்றார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

தமிழ் அரசியல்வாதிகளும் இவ்விதமே செயற்படுகின்றார்கள். மக்களின் வாழ்வாதார பிரச்சினையை விட, தீர்வுத்திட்டத்திற்கே இக்காலத்திலும் முன்னுரிமை கொடுக்கின்றனர். ஆனாலும் முஸ்லிம் அரசியல்வாதிகளை விட ஒப்பீட்டளவில் அவர்கள் குறைந்தளவுக்கே பிடில் வாசிக்கின்றனர் எனலாம்.

நாட்டில் எல்லாம் சரியாக இருக்கும் போது, மக்களை ஆள்வதற்கு திறன்மிக்க ஆட்சியாளர்கள் அவசியமில்லை. நெருக்கடி, சிக்கல் வரும்போதுதான் அது தேவைப்படுகின்றது. இது சிறுபான்மை அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்.

உண்மையில், கோட்டாபயவோ மஹிந்தவோ ராஜபக்ஷ குடும்பமோ வீட்டுக்குப் போகவேண்டும் என்ற தேவை சாதாரண மக்களுக்கு இருக்கவில்லை. ஆனால், இந்த நெருக்கடிக்கெல்லாம் அவர்கள்தான் காரணம் என்பதாலேயே, அவர்களை வீட்டுக்கு அனுப்புவதைத் தவிர மக்களுக்கு வேறு தெரிவு இருக்கவில்லை.

இன்றைய நிலைவரப்படி, அரசியலமைப்பு திருத்தங்கள் பற்றியோ சட்ட சீர்திருத்தங்கள் பற்றியோ மக்களுக்கு கவலையில்லை. இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் பிரச்சினையில்லை. ரணில் வருகின்றாரா, தம்மிக்க வருகின்றாரா, மீண்டும் மஹிந்த வரப் போகின்றாரா என்பதையெல்லாம் விட, மக்கள் மனதில் இன்றிருக்கின்ற கேள்விகள் வேறுபட்டவை.

எத்தனை மணிக்கு வரிசைக்கு செல்வது? எரிபொருள் எப்போது வரும்? எரிவாயு எப்போது கிடைக்கும்? எப்போது வீட்டுக்குத் திரும்புவோம்? எவ்வாறு மூன்று வேளையும் சாப்பிடப் போகின்றோம்? நாளைய நாள் எப்படி அமையப் போகின்றது? பிள்ளைகளின் எதிர்காலம் என்ன? இவர்கள் இந்த நெருக்கடியை தீர்ப்பார்களா? என்பவையே அந்தக் கேள்விகளாகும்.

எனவே, நவீன நீரோக்கள் இதுபற்றி இனியாவது கொஞ்சம் அக்கறையுடன் சிந்தித்து, செயலாற்ற வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

காதலில் பதவி, பணம், அந்தஸ்து, சாதி போன்றவை முக்கியம் இல்லை எனக் கதைகளில், திரைப்படங்களில், சின்னத்திரைகளில் வலியுறுத்திச் சொல்வார்கள். காதலில் தோல்வியடைந்த நாயகன், நாயகி நிலை கண்டு, இந்த இரசிகர் கூட்டமும் புலம்பியபடி பார்ப்பார்கள்.

ஆனால், இந்தப் பார்வை அல்லது எண்ணம், சமூகப் பெரும்பரப்பில் எதிர்மறையாகவே கருதப்படுகின்றது. சொல்வதைப் போல், எல்லோரும் நடப்பதில்லை.

உண்மையான காதலுடன் தங்களை அர்ப்பணிப்பவர்கள், சிறிய விகிதத்தில் இருக்கின்றனர். ஒருத்தியை அல்லது ஒருவனை விரும்புவதற்கு முன்னர் இவர்கள், அவர்களின் வரலாற்றை ஆராய்கின்றனர்.

தங்கள் சாதியா, மதமா, பதவி, சொத்துப் பத்துகள் குறித்து அலசித் தேடிய பின்னர் காதல் மலர்கின்றது. அதிலும் சிலர் பொழுதுபோக்குக்கா, தேவைக்காக, ரசித்து ஊர் சுற்றிய பின்னர் பிரிந்துவிடுகின்றனர்.

இதைப் பொழுதுபோக்கு எனச் சொன்னவர்கள், தங்கள் தவறுகளை மறைத்து, வேறு திருமணம் செய்து கொண்டு, தங்களைப் புதுமை விரும்பியாக சொல்லிக் கொள்வதும் உண்டு.

ஆனால், சிலரது வாழ்க்கையில் உண்மை அன்பு இருந்தாலும், அதை உறவுகள் சிதைத்து விடுவது பரிதாபம். மனங்களோடு விளையாடக்கூடாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அழிக்கப்படும் தேக்கங்காடு

முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள் குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தேக்கு மரக் காட்டில் இருந்து, தேக்கு மரங்கள் வெட்டப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

1996ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் குறித்த தேக்கங் காடு, 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டது. குறைந்தது 35 ஆண்டுகளுக்கு பின்னர்தான் தேக்கு மரங்கள் வெட்டப்பட வேண்டும். தற்போது கிராம மட்ட பொது அமைப்புகளின் இணக்கப்பாடுகள் இன்றி, தேக்கு மரங்கள், முதிர்ச்சி அடைவதற்கு முன்பே, அழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிராம மட்ட சிவில் பாதுகாப்புக் கூட்டங்களில் பொலிஸார், காடு அழிப்பு நடைபெற்றால் உடன் தகவல் வழங்குமாறு கூறிவரும் நிலையில், ஒரு கிராமத்தின் இயற்கை வளம், அதன் வளர்ச்சிக்கு முன்னரே அழிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் இக்கிராம மக்கள், அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் திணைக்களங்களே, தமது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி, தேக்கு மரங்களை வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.

நடராசா கிருஸ்ணகுமார்

# செல்லக் குட்டியுடன் விமான பயணம்



நடிகை கீர்த்தி சுரேஷ், 'நைக்' என்ற நாய் ஒன்றை வளர்த்து வருகிறார். அதனுடன் பல புகைப்படங்கள் வீடியோக்களை ஏற்கெனவே வெளியிட்டுள்ளார்.

தன் செல்லக் குட்டியை முதல் முறையாக விமானப் பயணத்தில் அழைத்துச் சென்றது குறித்தும் ஒரு பதிவிட்டுள்ளார்.

மானத்திற்கு வெளியே, உள்ளே என புகைப்படங்களையும், வீடியோ ஒன்றையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துள்ளார்.

அது ஒரு தனி விமானப் பயணமாகத்தான் தெரிகிறது. அந்தப் பயணம் எப்படி இருந்தது என்பது குறித்து நடிகை காஜல் அகர்வால் உள்ளிட்ட சில பிரபலங்கள் கீர்த்தியிடம் கேட்டுள்ளனர்.

## கிரித்தியின் ஆசை



தெலுங்கில் பிரபல தெலுங்கு நடிகை கிரித்தி ஷெட்டி இயக்குநர் லிங்குசாமி இயக்கத்தில் உருவாகியுள்ள 'தி வாரியர்' திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்தத் திரைப்படத்தில் இருந்து வெளியான 'புல்லட்டு' என்ற பாடல் மாபெரும் ஹிட்டாகி உள்ளது.

அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற கிரித்தி ஷெட்டியிடம் தென்னிந்திய சினிமாவில் பிடித்த நடிகர்கள் பற்றி கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்த அவர், "தென்னிந்திய சினிமாவில் பல நடிகர்களை எனக்கு பிடிக்கும். தமிழ் சினிமாவில் விஜய் எனக்கு மிகவும் பிடிக்கும். அவருடன் இணைந்து நடிக்க ஆசைப்படுகிறேன். தகுந்த நேரம் வரும்போது அது நடைபெறும் என்று எதிர்பார்க்கிறேன்" என்று கூறியுள்ளார்.

கிரித்தி ஷெட்டி, தற்போது தமிழ் மற்றும் தெலுங்கில் வெங்கட் பிரபு இயக்கி வரும் புதிய திரைப்படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் ஸ் ருதி



தமிழ், தெலுங்கு, கன்னடம் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் நடித்து வருபவர் ஸ் ருதிஹாசன். நடிகர் பிரபாஸ் நடிப்பில் உருவாகிவரும் 'சலார்' திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

'கே ஜி எப்' திரைப்பட இயக்குநர் பிரசாந்த் நீல் இயக்கி வருகிறார். மேலும் மெகா ஸ்டார் சிரஞ்சீவி நடிப்பில் தயாராகி வரும் அவரின் 154ஆவது திரைப்படத்திலும், கோபிசந்த் மாலினேனி இயக்கத்தில் பாலகிருஷ்ணா நடிப்பில் தயாராகிa வரும் பெயரிடப்படாத படத்திலும் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

இந்தநிலையில் தமிழில் கவலை வேண்டாம், யாமிருக்க பயமேன் போன்ற திரைப்படங்களை இயக்கிய இயக்குநர் டிகே இயக்கும் அடுத்தத் திரைப்படத்தில் ஸ் ருதிஹாசன் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முதல் ஹீரோவுடன் மீண்டும் மீனா



கடந்த 1982ஆம் ஆண்டு முதல் குழந்தை நட்சத்திரமாக நடித்து வரும் நடிகை மீனா அதன்பின் நாயகியாக தமிழ் தெலுங்கு உள்பட பல மொழிகளில் நடித்துள்ளார்.

இந்த நிலையில் பழம்பெரும் தெலுங்கு நடிகர் ராஜேந்திர பிரசாத் உடன் இணைந்து தற்போது நடிகை மீனா ஒரு திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இதுகுறித்த புகைப்படத்தை நடிகை மீனா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு '32 ஆண்டுகள் கழித்து என்னுடைய முதல் ஹீரோவுடன் நான் மீண்டும் இணைந்து நடிக்கிறேன்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த புகைப்படம் தற்போது இணையதளங்களில் வைரலாக வருகிறது .

கடந்த 1990ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான 'நவயுகம்' என்ற திரைப்படத்தில் நடிகை மீனா நாயகியாக அறிமுகமானார். அந்தத் திரைப்படத்தில் ராஜேந்திர பிரசாத்துக்கு ஜோடியாக அவர் நடித்திருந்தார்.

## கர்ப்பிணியாக நடிகை வனிதா

தளபதி விஜய் நடித்த 'மாஸ்டர்' திரைப்படத்தை தயாரித்த சேவியர் பிரிட்டோ தயாரிக்கும் அடுத்தத் திரைப்படம் 'வாசுவின் கர்ப்பிணிகள்'. இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தத் திரைப்படத்தில் அனிகா சுரேந்திரன், வனிதா விஜயகுமார் மற்றும் சீதா ஆகியோர் நிறைமாத கர்ப்பிணியாக நடித்திருந்த ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் கடந்த சில நாட்களுக்கு முன் வெளியாகி வைரல் ஆனது.

இந்த நிலையில் இந்தத் திரைப்படத்தின் வனிதாவின் பாத்திரம் குறித்த போஸ்டர் தற்போது வெளியாகியுள்ளது. நடிகை வனிதா 'பல்லவி' என்ற கேரக்டரில் நடித்து வருவதாக கூறப்படும் இந்த போஸ்டரில் அவர் கர்ப்பமாக இருப்பது போன்று உள்ளது.

சென்னை

அ.தி.மு.கவில்

# சூடுபிடிக்கும் ஒற்றை தலைமை விவகாரம்

### 'நமது அம்மா' நாளிதழின் நிறுவநர் பதவியில் இருந்து ஓ.பிஎஸ் நீக்கம்




அ.தி.மு.க.வில் ஒற்றைத் தலைமை விவகாரம் நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுத்து வருகிறது. வியாழக்கிழமை (23) நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமியும் ஓ.பன்னீர்செல்வமும் பங்கேற்றிருந்தனர். அப்போது ஓ.பன்னீர்செல்வத்துக்கு பொதுக்குழு உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து கோஷமிட்டதால் ஓ. பன்னீர்செல்வம் பாதியிலேயே வெளியேறினார்.

நேராக புதுடெல்லி சென்ற ஓ.பன்னீர்செல்வம், அங்கு தேர்தல் ஆணையத்தில் முறையிட்டுவிட்டு, சென்னை திரும்பி, தனது சொந்த மாவட்டமான தேனிக்கு சென்றார். அங்கு, ஒற்றைத் தலைமை விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி வகுக்கும் வியூகத்தை முறியடிப்பது தொடர்பாக அவர், நிர்வாகிகள் மற்றும் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில்தான் ஓ. பன்னீர்செல்வத்துக்கு அழைப்பு விடுக்காமல் எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்கள், தலைமை கழக நிர்வாகிகள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். வழக்கமாக அ.தி. மு.க தலைமை கழகம் சார்பில் வெளியிடப்படும் அறிவிப்புகளில் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவரின் பெயர்களும் இடம்பெற்றிருக்கும். ஆனால், தலைமை கழக நிர்வாகிகள் கூட்டத்துக்கான அறிவிப்பை தலைமை நிலைய செயலாளர் வெளியிட்டிருந்தார். இதன்படி, எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேற்று (27) நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைமை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், அ.தி. மு.க.வில் ஒருங்கிணைப்பாளர்கள் பதவி காலாவதியாகி விட்டதால், ஓ.பன்னீர்செல்வம் 'முன்னாள் ஒருங்கிணைப்பாளர்' என்றும் அவர் பொருளாளராக மட்டுமே உள்ளார் என்றும் பொருளாளர் பதவியையும் பறிக்க முடிவு செய்திருப்பதாகவும் பொதுக்குழு கூட்டத்தை திட்டமிட்டபடி நடத்துவது மற்றும் கட்சியின் நிர்வாக வசதிக்காக எடப்பாடி பழனிசாமியை தற்காலிகமாக தலைமை பொறுப்பில் அமர வைப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.


மறுபுறம், ஓ. பன்னீர்செல்வம் இந்தக் கூட்டம் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார். "அ.அ.தி.மு.கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில், நான் எந்தவிதமான ஒப்புதலையும் மேற்படி கூட்டத்துக்கு அளிக்கவில்லை. விதியை மீறி கூட்டப்பட்டுள்ள மேற்படி கூட்டம், கழக சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பானதாகும். மேற்படி கூட்டத்தில் ஏதேனும் முடிவுகள் எடுக்கப்பட்டால், அது கழக ஒருங்கிணைப்பாளர் மற்றும் கழக இணை ஒருங்கிணைப்பாளர் நிர்வாகத்தில் இருக்கும் கழகத்தையும் கழகத் தொண்டர்களையும் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது" என்றார்.

இதேவேளை, அ.தி. மு.கவின் அதிகாரபூர்வ நாளிதழான 'நமது அம்மா' நாளிதழின் நிறுவநர் பதவியில் இருந்து ஓ. பன்னீர்செல்வம் நீக்கப்பட்டுள்ளார். நேற்று வரை, 'நமது அம்மா' நாளிதழின் நிறுவனர்களாக ஓபிஎஸ் - ஈபிஎஸ் ஆகியோர் இருந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்

கர்நாடக கருவூலத்தில்

## முடங்கிக் கிடக்கும் ஜெயலலிதாவின் பொருட்கள்



தமிழக முன்னாள் முதலமைச்சருக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை, தமிழ்நாட்டில் இருந்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துகக மாற்றப்பட்டதும், ஜெயலலிதா வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட அனைத்து பொருட்களும் கர்நாடகத்துக்கு கொண்டுசெல்லப்பட்டன.

பல கோடி ரூபாய் மதிப்பிலான அந்தப் பொருட்கள், 26 ஆண்டுகளாக கர்நாடக அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், அங்குள்ள பொருட்களின் விவரம் வெளியிடப்பட்டு உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு: 11,344 பட்டுப் புடவைகள் உள்ளிட்ட விலை உயர்ந்த சேலைகள், 44 குளிர்சாதன எந்திரங்கள், 33 தொலைபேசிகள், 131 சூட்கேசுகள், 91 கைக்கடிகாரங்கள், 27 சுவர் கடிகாரங்கள், 86 மின்விசிறிகள், 146 அலங்கரிக்கப்பட்ட நாற்காலிகள், 34 டீப்பாய்கள், 31 மேஜைகள், 24 மெத்தைகள், ஒன்பது உடை அலங்கார மேசைகள், 81 அலங்கார தொங்கும் மின்விளக்குகள், 20 ஷோபா செட்டுகள். 750 ஜோடி செருப்புகள், 31 உடை அலங்கார மேசை கண்ணாடிகள், 215 மதுபானம் அருந்தும் கண்ணாடி தம்ளர்கள், மூன்று இரும்பு பெட்டகங்கள், 250 சால்வைகள், 12 குளிர்பதன பெட்டிகள், ரூ.1 லட்சத்து 60 ஆயிரத்து 514 மற்றும் ரூ.32 ஆயிரத்து 688 ரொக்கம், 10 தொலைக்காட்சிகள், 8 வி.சி.ஆர்கள்., ஒரு வீடியோ கமெரா இவைதவிர தங்கம், வைரம், ரூபி, மரகதங்கள், முத்துக்கள், இரத்தின கற்கள், தங்க வளையல்கள், கை சங்கிலிகள், கம்மல்கள், காதுமாட்டிகள், மூக்குத்திகள், வீர வாள்கள், மயில் சிலைகள், விலை உயர்ந்த பன்னீர் சொம்பு, முறுக்கு சங்கிலிகள், சந்தன கிண்ணம், தங்க பேனா, தங்க தட்டு, தங்க காசு மாலை, தங்க சாமி சிலைகள், காமாட்சி விளக்குகள், தங்க மாம்பழம், தங்க கைக்கடிகாரம் ஆகியன உள்ளன.

கோவை

நகைகளை திருடியதாக கூறி

## ஆதிவாசிக்கு சூடு வைத்து சித்திரவதை

கோவை, தொண்டாமுத்தூரைச் சேர்ந்தவர் சந்திரன் (50). ஆதிவாசியான இவர், கூலித் தொழிலாளி. கடந்த 23ஆம் திகதி மாலை சந்திரனை, அப்பகுதியைச் சேர்ந்த மூன்று பேர் தோட்டத்தில் வேலை இருப்பதாக கூறி அழைத்து சென்றனர்.

அவ்வாறு சென்ற இடத்தில், நான்கு மாதத்துக்கு முன்னர் தங்களது நகைகளை திருடிவிட்டதாக கூறி, சந்திரனின் கை, கால்களை கட்டிப்போட்டு அடித்துள்ளனர். மேலும், சூடான இரும்பு கம்பியை கையால் பிடிக்க செய்து சித்திரவதை செய்து, கொலை மிரட்டலும் விடுத்துள்ளனர். இதுகுறித்து சந்திரன் அளித்த புகாரின் பேரில், பொலிஸார் கொலை மிரட்டல், ஆபாச வார்த்தைகளால் பேசுதல், துன்புறுத்துதல், பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து மூன்று பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சென்னை

## "பேரறிவாளனுக்கு பெண் பார்க்கிறோம்"



பேரறிவாளனுக்கு பெண் பார்க்க தொடங்கி உள்ளோம்; விரைவில் அறிவிப்பு வரும் என்று அற்புதம்மாள் கூறியுள்ளார். புழல் சிறையில் ரொபர்ட் பயாசை சந்தித்த பின்னர், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் இதனை தெரிவித்துள்ளார்.

திருச்சி

## மோதிக்கொண்ட கைதிகள்

திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள், தங்களை சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க கோரி, உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

இதில், 20 பேர் கடந்த 24ஆம் திகதி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். உமா ரமணன் என்பவர் தீக்குளித்தும் 19 பேர் தூக்க மாத்திரையை உட்கொண்டனர். இதையடுத்து திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பெற மறுத்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் கெட்டியான் பாண்டிக்கும் (வயது 42) சிகிச்சை பெறும் மற்றைய இலங்கை தமிழர்களுக்கும் இடையே, நேற்றுமுன்தினம் (26) இரவு மோதல் ஏற்பட்டது.

இதில் கெட்டியான் பாண்டி, கண்ணாடி ஜன்னலில் மோதியதாக கூறப்படுகிறது. அப்போது அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. ஜன்னலில் இருந்த உடைந்த கண்ணாடியை எடுத்து மற்றவர்களை அவர் தாக்க முயன்றார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் அவரை தடுத்தனர். இதையடுத்து சிகிச்சை பெற்று வந்த இலங்கைத் தமிழர்களில் 19 பேர், பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் திருச்சி சிறப்பு முகாமுக்கு மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஸ்பெயின்

கூட்ட நெரிசலில் சிக்கி

# அகதிகள் 23 பேர் உயிரிழப்பு

ஸ்பெயின் நாட்டில் அமைந்துள்ள மெல்லிலா நகரத்திற்குள் நுழைவதற்காக மொராக்கோ நாட்டின் எல்லையில் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் அதிகமான அகதிகள் குவிந்துள்ளனர்.

இந்நிலையில் அப்பகுதியில் பணியில் இருந்த மொராக்கோ எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் அகதிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு முயற்சி செய்துள்ள நிலையில், இரு தரப்பினருக்கும் மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மோதலைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான அகதிகள் எல்லையில் உள்ள வேலியை தாண்டி மெல்லிலா நகருக்குள் செல்ல முயற்சித்த நிலையில், அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கிய அகதிகளில் 23 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும் 70க்கும்



மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர் எனவும், இச் சம்பவத்தால் ஸ்பெயின்-மொராக்கோ எல்லையில் பதற்றமான சூழல் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## ஆற்றில் 10 மாதங்களாக கிடந்த ஐபோன்

### உரிமையாளருக்கு காத்திருந்த இன்ப அதிர்ச்சி



பிரித்தானியாவைச் சேர்ந்த ஓவைன் டேவிஸ் என்பவர் தனது ஐபோனை 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சின்டர்ஃபோர்ட் அருகேயுள்ள ஆற்றில் தொலைத்தார்.

அதன்பின் ஏறக்குறைய 10 மாதங்களுக்குப் பின்னர் அதே ஆற்றில் தன் குடும்பத்துடன் மிகுவல் பச்சேகோ என்பவர் படகில் பயணம் மேற்கொள்ளும்போது, எதிர்பாராத விதமாக குறித்த ஐபோனை கண்டெடுத்துள்ளார்.

போன் ரீஸ்டார்ட் ஆகாது என தெரிந்தும், அதில் சென்டிமென்ட் விஷயங்கள் இருந்திருக்கலாம் என நினைத்ததால், ஐபோனை உலர்த்தி மின்னர் மின்னேற்றியுள்ளார்.

இதன் போது குறித்த ஐ போன் இயங்கியதைக் கண்டு இன்ப அதிர்ச்சியடைந்த அவர், உரியவர்களிடம் அதனை ஒப்படைக்கும் வகையில், ஐபோன் ஸ்கிரீன்சேவரில் உள்ளவர்களின் புகைப்படத்தை தனது பேஸ் புக் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இதனையடுத்து நீண்ட நாள்களின் பின்னர் டேவிஸின் நண்பர்கள், குறித்த ஐ போனை அடையாளம் கண்டு பச்சேகோவுடன் தொடர்புகொள்ள டேவிஸுக்கு உதவியுள்ளனர்.

அதனை தொடர்ந்து குறித்த ஐபோனை இயங்கும் நிலையில் டேவிஸ் பெற்றுக் கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தென் ஆபிரிக்கா

இரவுநேர கேளிக்கை விடுதியில்

## மர்மமான முறையில் 21 பேர் உயிரிழப்பு

தென் ஆபிரிக்காவில் இரவுநேர கேளிக்கை விடுதியொன்றில் 21 பேர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிகேடியர் டெம்பின்கோசி கினானா எனும் இடத்தில் உள்ள இரவு நேர விடுதி ஒன்றிலேயே சனிக்கிழமை (25) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்த விடுதியில் இருந்து 18 முதல் 20 வயதுடைய இளைஞர்கள் 21 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கூட்ட நெரிசலில் சிக்கியோ அல்லது விஷம் கலக்கப்பட்ட மதுவை அருந்தியோ குறித்த 21 பேரும் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.


நெதர்லாந்து

## உலகிலேயே விலை உயர்ந்த தலையணை

உலகின் மிக விலை உயர்ந்த தலையணை நெதர்லாந்து நாட்டில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இதன் விலை இலங்கை மதிப்பில் சுமார் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கம், வைரம், நீல மணி உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள் இதில் பதிக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் 15 வருட கடின உழைப்புக்குப் பின்னர் இத் தலையணை தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும் அதன்




வடிவமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தூக்கமின்மை உள்ளவர்களுக்காகவே இத்தலையணை பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

இம்ரான் கானை உளவு பார்க்க

## படுக்கை அறையில் கெமரா வைத்த ஊழியர்

பாகிஸ்தான் தெரிக் இ இன்சாப் கட்சியின் தலைவரும் அந்நாட்டின் முன்னாள் பிரதமருமான இம்ரான் கானின் இல்லத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர், இம்ரான் கானின் படுக்கை அறையில் உளவு பார்க்கும் கருவியை பொருத்த முயற்சி செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஏப்ரல் மாதம் இம்ரான் கானின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அவர் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அமைக்கப்பட்ட ஆட்சியில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் சகோதரர் ஷெபாஸ் ஷெரிப் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.



எனினும் தனது ஆட்சி அந்நிய சக்திகளின் சதியால் கவிழ்க்கப்பட்டது என தொடர்ந்து கூறி வரும் இம்ரான் கான், நாடு முழுவதும் மக்களை சந்தித்து கூட்டம் நடத்தி ஆதரவு திரட்டி வருவதோடு, போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில் அண்மையில் இம்ரான் கானை உளவு பார்க்க, அவரது படுக்கை அறையில் ஊழியர் ஒருவர் இரகசிய கெமரா ஒன்றைப் பொருத்த முயற்சி செய்ததாகவும், இதன் போது அவர் பாதுகாப்பு அதிகாரிகளால் கையும் களவுமாகப் பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் “இது மிகவும் ஆபத்தான போக்கு. இது போன்ற செயல்களை செய்வதை எனது எதிர் தரப்பினர் நிறுத்திக்கொள்ள வேண்டும்” என இம்ரான் கான் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை வீழ்த்திய இலங்கை

இந்திய பெண்கள் அணிக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் இலங்கைப் பெண்கள் அணி வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் தோற்று ஏற்கெனவே தொடரை இழந்த இலங்கை, தம்புள்ளையில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் ஆறுதல் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 138/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹர்மன்பிறீட் கௌர் ஆ.இ 39 (33), ஜெமிமா றொட்றிகாஸ் 33 (30), ஸ்மிருதி மந்தனா 22 (21), சப்பினெனி மேகஹனா 22 (26), பூஜா வஸ்ரகார் 13 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒஷாடி றணசிங்கே 1/13 [3], அமா காஞ்சனா 1/22 [4], சுகந்திகா குமாரி 1/28 [4], இனோகா றணவீர 1/31 [4])

இலங்கை: 141/3 (17 ஓவ.) துடுப்பாட்டம்: சாமரி அத்தப்பத்து ஆ.இ 80 (48), நிலக்‌ஷி டி சில்வா 30 (28), ஹர்ஷிதா சமரவிக்கிரம 13 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரேணுகா சிங்க் 1/27 [4], ஹர்மன்பிறீட் கௌர் 0/13 [2], ஷெஃபாலி வர்மா 0/4 [1])




போட்டியின் நாயகி: சாமரி அத்தப்பத்து

தொடரின் நாயகி: ஹர்மன்பிறீட் கௌர்



முதலாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## அயர்லாந்தை வென்ற இந்தியா

அயர்லாந்துக்கெதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், டப்ளினில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ஹர்டிக் பாண்டியா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

இந்தியா சார்பாக வேகப்பந்துவீச்சாளர் உம்ரான் மலிக்கும், அயர்லாந்து சார்பாக வேகப்பந்துவீச்சாளர் கோனர் ஒல்பேர்ட்டும் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தனர்.

மழை காரணமாக 12 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இனிங்ஸில் ஆரம்பத்திலேயே புவ்னேஷ்வர் குமார், பாண்டியா, ஆவேஷ் கானிடம் விக்கெட்டை இழந்து தடுமாறிய அயர்லாந்து பின்னர் கட்டுக்கோப்பாக பந்துவீசிய யுஸ்வேந்திர சஹாலிடமும் விக்கெட்டை இழந்தபோதும் ஹரி டெக்டரின் ஆட்டமிழக்காத 64 (33) ஓட்டங்களோடு 12 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 109 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, இஷன் கிஷனின் 26 (11) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றது. பின்னர் அவரும், சூரியகுமார் யாதவ்வும் அடுத்தடுத்து கிரேய்க் யங்கிடம் வீழ்ந்தபோதும், தீபக் ஹூடாவின் ஆட்டமிழக்காத 47 (29), பாண்டியாவின் 24 (12) ஓட்டங்களோடு 9.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை இந்தியா அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சஹால் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நியூசிலாந்துக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

## வெற்றியை நோக்கி இங்கிலாந்து

நியூசிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், லீட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த மூன்றாவது டெஸ்டின் நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் வெற்றியை நோக்கி இங்கிலாந்து நகருகின்றது.

நேற்று முன்தின நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த நியூசிலாந்து, டரைல் மிற்செல், டொம் பிளன்டெல் மூலம் ஓட்டங்களைச் சேர்த்தபோதும் ஏனையோர் விரைவில் மத்தியூ பொட்ஸ், ஜேக் லீச்சிடம் (4) விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து 326 ஓட்டங்களையே பெற்றது. மிற்செல் 56, பிளென்டல் ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில், 296 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அலெக்ஸ் லீஸ், ஸக் க்றொலியை இழந்தபோதும் ஒலி போப், ஜோ றூட்டின் இணைப்பாட்டத்தில் நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், போப் 81 ஓட்டங்களுடனும், றூட் 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 329/10 (துடுப்பாட்டம்: டரைல் மிற்செல் 109, டொம் பிளென்டல் 55, டிம் சௌதி 33, கேன் வில்லியம்ஸன் 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 5/100, ஸ்டூவர்ட் ப்ரோட் 3/62, மத்தியூ பொட்ஸ் 1/34, ஜேமி ஒவெர்ட்டன் 1/85)

இங்கிலாந்து: 360/10 (துடுப்பாட்டம்: ஜொனி பெயார்ஸ்டோ 162, ஜேமி ஒவெர்ட்டன் 97, ஸ்டூவர்ட் ப்ரோட் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்றெண்ட் போல்ட் 4/104, டிம் சௌதி 3/100, நீல் வக்னர் 2/75, மிஷெல் பிறேஸ்வெல் 1/54)

நியூசிலாந்து: 326/10 (துடுப்பாட்டம்: டொம் பிளென்டல் ஆ.இ 88, டொம் லேதம் 76, டரைல் மிற்செல் 56, கேன் வில்லியம்ஸன் 48 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேக் லீச் 5/66, மத்தியூ பொட்ஸ் 3/66, ஜேமி ஒவெர்ட்டன் 1/61, ஜோ றூட் 1/29)

இங்கிலாந்து: 183/2 (துடுப்பாட்டம்: ஒலி போப் ஆ.இ 81, ஜோ றூட் ஆ.இ 55 ஓட்டங்கள். பந்துவீச்சு: 1/70)



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக

## தொடர்ந்து தடுமாறும் பங்களாதேஷ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், சென். லூசியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டில் இனிங்ஸ் தோல்வியை நோக்கி பங்களாதேஷ் நகருகிறது.

மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், 408 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. கைல் மேயர்ஸ் 146 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், காலிட் அஹ்மட் 5, மெஹிடி ஹஸன் மிராஸ் 3, ஷொரிஃபுல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் நுருல் ஹஸன் 16 ஓட்டங்களுடனும், மெஹிடி ஹஸன் மிராஸ் ஓட்டமெதுவும் பெறாமலும் களத்திலுள்ளனர். கேமார் றோச் 3, அல்ஸாரி ஜோசப் 2, ஜேடன் சியல்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பங்களாதேஷ்: 234/10 துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 53, தமிம் இக்பால் 46, ஷொரிஃபுல் இஸ்லாம் 26, நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 26, அனமும் ஹக் 23, எபொடொட் ஹொஸைன் ஆ.இ 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 3/55, ஜேடன் சியல்ஸ் 3/53, அன்டர்சன் பிலிப் 2/30, கைல் மேயர்ஸ் 2/35.

மே. தீவுகள்: 408/10



துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 146, கிறேய்க் பிறத்வெய்ட் 51, ஜோன் கம்பெல் 45, ஜெர்மைன் பிளக்வூட் 40, ஜோஷுவா டா சில்வா 29, றேமன் றீஃபயர் 22, கேமார் றோச் ஆ.இ 18 ஓட்டங்கள். பந்துவீச்சு: காலிட் அஹ்மட் 5/106, மெஹிடி ஹஸன் மிராஸ் 3/91, ஷொஃரிபுல் இஸ்லாம் 2/76.

பங்களாதேஷ்: 132/6 துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: கேமார் றோச் 3/32, அல்ஸாரி ஜோசப் 2/31, ஜேடன் சியல்ஸ் 1/15.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 28 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.